Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

God is faithful for the past seventy years.

Vol. 70 அவன் கர்த்தரால் ஆசீர்வாதத்தையும், தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான். சங்.24:5 அக்டோபர் 2024 No.10

விசுவாசம்

Faith

Andrew Murray

"விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள்." லூக்.1:45

"...எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்." (அப்.27:25)

ஆபிரகாம் "தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, ... விசுவாசத்தில் வல்லவனானான்." (ரோமர் 4:20-21)

தேவன் தமது வசனத்தை உங்கள் இருதயத்தில் பதித்து வைக்கும்படி கூறியிருக்கிறார். விசுவாசத்தினால் வசனம் எடுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு, இருதய ஆழங்களில் சென்றடைகிறது. இளங்கிறிஸ்தவர்கள் விசுவாசம் என்றால் என்ன என்று கண்டு பிடிக்கப் பிரயாசப்படட்டும். அப்போது தான் அவன் பெரிய காரியங்களெல்லாம் விசுவாசத்தோடு இணைந்திருப்பதைக் கண்டு கொள்வான். முழுமையான இரட்சிப்பு விசுவாசத்தை சார்ந்தது என்ற பூரண நம்பிக்கை தனைப் பெறுவான்.

முதலாவது குறிப்பிட்டிருக்கும் மூன்று வசனங்களையும் மறுபடியும் மறுபடியும் படியுங்கள். அவற்றிலிருந்து விசுவாசத்தைப் பற்றி என்ன அறிந்து கொள்கிறீர்கள்?

இந்த வசனங்கள் விசுவாசம் தேவன் சொன்ன, அல்லது வாக்குப் பண்ணினவைகளையே சார்ந்திருக்கின்றன. தேவன் ஒன்றைச் செய்யுமுன் தமது வார்த்தையின் மூலம் அதை வெளிப்படுத்துகிறார். கிறிஸ்தவன் இதை உணர்ந்து சொந்தமாக்கிக் கொள்ளும் போது தேவன் சொன்னதை அப்படியே நிறைவேற்றுவார். தேவன் பேசுவதும் செய்வதும் சேர்ந்து நடைபெறும். செயல், வார்த்தையைத் தொடருகிறது. ".. அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" (எண். 23:19) எனவே தேவன் ஒன்றை செய்யும்படி வாக்குப் பண்ணினால் அவர் நிச்சயம் செய்து நிறைவேற்றுவார். நான் விசுவாசித்து காத்திருக்க வேண்டும். அவரது வாக்குத்தத்தத்தை நான் பற்றிக் கொள்கிறேன். தேவன் அதை எனக்கு நன்மையாக்கித் தருவார்.

தேவன் சொல்வது உண்மை அது நிச்சயம் என்பதுதான் விசுவாசம். தேவன் ஒன்றை இருக்கிறது என்று சொன்னால் நாம் அதைக் காணாவிட்டாலும் மகிழ்ந்து களிகூருகிறோம். தேவன் எனக்கு எதையோ பரத்தில் வைத்திருக்கிறேன் என்று சொன்னால் விசுவாசத்தால் அதை எனக்கு சொந்தமாக்கிக் கொள்ளுகிறேன். எதையோ நடக்கும் என்று அவர் சொன்னாலும் அதிலே நம்பிக்கை வைக்கிறேன். நான் காணாதவற்றை இல்லாதவற்றை வரும் என்று சொல்லப்பட்டால் விசுவாசம் அவற்றைப் பெற்றுக்கொள்ளும். "விசுவாசம் என்பது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." (எபி.11:1) விசுவாசம் தேவன் சொல்லியதையே கேட்கிறது. பின்பு அவர் தமது வாக்கை நிறைவேற்றுவதில் உண்மையும், வல்லமையுள்ளவர் என்பதால் மகிழ்ச்சியடைகிறது.

வேத வசனங்களைப் படித்துப் பார்ப்போம். மரியாளைக் குறித்து: "விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தரால் அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்" என்றாள் (லூக்.1:45) தேவனுடைய வசனத்தில் சொல்லப்பட்டவை யாவும் நிறைவேறும். அதை நான் விசுவாசிக்கிறேன்.

ஆபிரகாம், தனக்கு தேவன் வாக்குப்பண்ணியவைகளை நிறைவேற்றுவார் என முழுவதுமாக விசுவாசித்தான். இதுவே விசுவாசத்தின் உறுதி.

பவுலைக் குறித்து, "தேவன் எனக்குச் சொல்லப்பட்டபடியே நடக்கும் என விசுவாசிக்கிறேன்" என்றான்.

இளம் கிறிஸ்தவனே, புதிதும் நித்தியமுமான உன்னிலுள்ள ஜீவன் விசுவாசத்தினால் உண்டானது. அது ஆசீர்வாதமும் எளிமையுமான வாழ்வு. ஒவ்வொரு நாளும் அவருடைய வார்த்தையிடம் சென்று அதைக் கேட்டு அவர் செய்ததையும் செய்யப் போகிறதையும் கேட்கிறேன். அவரது வார்த்தைகளை உறுதியாகவும் முழுமையாகவும் ஏற்றுக்கொண்டு அவர் அதைச் செய்து முடிப்பார் என விசுவாசிக்கிறேன். பின்பு ஒரு குழந்தை போன்ற விசுவாசத்துடன் அவரது வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலுக்காக காத்திருக்கிறேன். பின்பு ஆத்துமா மரியாளைப் போல கீதம் பாடுகிறது. புது வாழ்வின் இரகசியம் **'தேவன் வாக்குப்பண்ணுகிறார், நான் விசுவாசிக்கிறேன். தேவன் நிறைவேற்றுகிறார்'** என்பதே.

பிதாவே, உமது பிள்ளை இந்த ஆசீர்வாதமான விசுவாச வாழ்வுக்காக நன்றி செலுத்துகிறது. என்னால் ஒன்றும் செய்ய இயலாது. ஆனால் உம்மால் எல்லாம் கூடும். நீர் செய்யப் போகிற வைகளையெல்லாம் உமது வசனம் பேசுகிறது. நான் வாசித்து விசுவாசிக்கிற யாவும் நிறைவேறுகின்றன. பிதாவே, இந்த எளிய மகிமையான விசுவாச வாழ்வில் உம்மோடு நான் நடக்க விரும்புகிறேன், ஆமென்.

என்னால் ஒன்றும் செய்ய இயலாது. ஆனால் உம்மால் எல்லாம் கூடும்.

ஒரு விலையேறப்பெற்ற பொக்கிஷம்

A precious treasure

Thomas Brooks

தேவ வசனம் உங்களை வழிநடத்தும் ஒளியாகவும், ஆலோசனை தரும் ஆலோசகராகவும், ஆறுதல் தரும் தேற்றரவாளனாகவும், பாதுகாக்கும் பட்டயமாகவும், குணமாக்கும் வைத்தியனாகவும், ஐசுவரியவானாக்கும் தங்கச் சுரங்கமாகவும், உடுத்துவிக்கும் அங்கியாகவும், முடிசூட்டும் கிரீடமாகவும், பெலப்படுத்தும் அப்பமாகவும், மகிழ்விக்கும் பானமாகவும், விருந்தளிக்கும் தேன் கூட்டுத் துணிக்கையாகவும், களிக்கூரச் செய்யும் இசையாகவும், சந்தோஷமளிக்கும் பரதீசாகவுமிருக்கிறது.

எனவே எல்லாவற்றிற்கும் முன்பாகவும், மேலாகவும், வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, அவற்றைக் கற்றுக் கொண்டு, அதிலே வாசம் பண்ணி, மகிழ்ச்சியடைவோம். அதைப் பொக்கிஷமாக பாதுகாப்போம். வேத வாக்கியங்களின் ஞானத்திற்கொப்பான ஞானமில்லை. அதின் அறிவுக்கு இணையான அறிவுமில்லை. அதினால் பெறும் அனுபவங்களுக்கு ஈடான எதுவுமே இல்லை. அதினால் பெறும் ஆறுதலுக்கு ஈடு இணை இல்லை. அதைப்போல நம்மைக் களிப்பூட்டுவதும் எதுவுமேயில்லை. அது போல நம்மைப் பாவ உணர்வடையச் செய்து நம்மை மறுரூபப்படுத்துவதும் வேறெதுவும் இல்லவே இல்லை.

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், **என் கிருபை** உன்னை விட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன் மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார் ஏசாயா 54:10.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

மேய் மாத தூதனில் இவ்வாறு எழுதியிருந்தேன் :

ஆண்டவருக்குச் சித்தமானால் மேய் மாதம் முதல் 5 மாதங்கள் ஒரே தலைப்பில், வெவ்வேறு செய்திகள் எழுதுவேன். அதனைத் தொடர்ந்து கீழே அச்சிடப்பட்டுள்ள தலைப்புகளில் தலையங்கம் எழுதுவேன்.

அக்டோபர் : **தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது** ஆதி.6:6.

நவம்பர் : **தூங்கு தூங்கு பாலா நீ** (கிறிஸ்மஸ் பாடல்)

டிசம்பர் : **அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்** லூக்.10:39.

ஜனவரி'25 : **நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்** ஆகாய் 2:19.

நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன் எசே. 22:30.

மேய்: ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான் ஆதி.16:22.

ஜூன்: அப்பொழுது அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசே, அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, ... அவருக்கு முன்பாகத் திறப்பின் வாயிலே நின்றான் சங்.106:23.

ஜூலை: திஸ்பியனாகிய எலியா... இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான்...என்றான் 1இராஜா.17: 1.

ஆகஸ்ட்: எஸ்றா இப்படி விண்ணப்பம் பண்ணி, அறிக்கையிட்டு அழுது, தேவனுடைய ஆலயத்துக்கு முன்பாக தாழ விழுந்து கிடக்கையில், ... ஜனங்கள் மிகவும் அழுதார்கள் எஸ்றா 10:1.

செப்டம்பர்: என் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக் கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும்? எஸ்தர் 8:6.

2024 அக்டோபர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், '**வெகுமனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்**' துதிக்கிறேன்.

இம்மாதம் ஆதியாகமம் புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ள ஒரு துயரமான சம்பவத்தை முதல் குறிப்பாக (1) எழுதுகிறேன். காரணம், நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய **வருகையின் காலம்** எப்படி இருக்கும் என்பதை இச்சம்பவத்தோடு ஒப்பிட்டு கூறினார். எனவே இந்த கடைசி நாட்களில் நாம் இதை சிந்திப்பதும், தியானிப்பதும், ஆண்டவருடைய பிள்ளைகளாகிய நமக்கு மிகுந்த பிரயோஜனமாயிருக்கும்.

1. கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது **ஆதி. 6:6.**

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் ஆதி.1:27. எதற்காக சிருஷ்டித்தார்?

2024 கர்த்தருக்கு முன்பாக உண்மையும் உத்தமுமாய் நடக்கும் ஆண்டு
I have walked before thee in truth and with a perfect heart. Isa.38:3

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே, பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியை பெறும்படிதானே மல்கியா 2:15. ஆனால் மனுஷர் பூமியின் மேல் பெருகத் துவங்கின போது, மனுஷருடைய அக்கிரமமும் பெருகினது.

மனுஷனுடைய அக்கிரமம் பூமியில் பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு,

தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது ஆதி.6:5,6.

தேவன் பூமியைப் பார்த்தார்; இதோ அது சீர்கெட்டதாயிருந்தது; மாம்சமான யாவரும் பூமியின் மேல் தங்கள் வழியைக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி: மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது; அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது; நான் அவர்களைப் பூமியோடுங் கூட அழித்துப்போடுவேன்.

நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு; அந்தப் பேழையிலே அறைகளை உண்டுபண்ணி, அதை உள்ளும் புறம்புமாக கீல்பூசு என்றார் ஆதி.6:12-14.

வானத்தின் கீழே ஜீவசுவாசமுள்ள சகல மாம்ச ஜந்துக்களையும் அழிக்க நான் பூமியின் மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணுவேன்; பூமியிலுள்ள யாவும் மாண்டுபோம்.

ஆனாலும் உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்; நீயும், உன்னோடே கூட உன் குமாரரும், உன் மனைவியும், உன் குமாரரின் மனைவிகளும் பேழைக்குள் பிரவேசியுங்கள் என்றார் ஆதி.6:17,18.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, தேவன் தேசத்தை ஏன் அழிக்கிறார் என்பதை தேவ வசனம் நமக்கு மிகத்தெளிவாக காண்பிக்கிறது. அழிவுக்கு தப்பும் ஏற்பாட்டையும் தேவன் ஏற்படுத்தி இருக்கிறார்.

பேழையை உண்டாக்கு
உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்
நீயும் உன் வீட்டாரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்.

பேழையை உண்டு பண்ணின ஆசாரிமார் அதற்குள் பிரவேசிக்கவில்லை, அழிந்து போனார்கள். கீல் பூசின பெயின்டர்கள், மரம் வெட்டினவர்கள் பேழைக்குள் பிரவேசிக்கவில்லை. இதைக்குறித்து பேதுரு அப்போஸ்தலன் மிகத்தெளிவாக எழுதுகிறார்:

பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான **எட்டுப்பேரைக்** காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின் மேல் ஜலப்பிரளயத்தை வரப் பண்ணி;

(3-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார் 2பேது. 2:5,9.

தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் **நித்திய ஜீவனை** அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார் யோ.3:16,17.

பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.

இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான் அப்.2:38,40.

இயேசு கிறிஸ்துவாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை அப்.4:12.

சிறைச்சாலைக்காரன் அவர்களை வெளியே அழைத்து வந்து: ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்றான்.

அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி,

அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள்.

மேலும் இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக் கொண்டு போய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள் அப்.16:27-33.

அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்.

அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது 1பேது 3:20,21.

இறுதியாக, மத்தேயு 24-ம் அதிகாரத்தில் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்வதை கேளுங்கள்:

பின்பு, அவர் ஒலிவ மலையின் மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்து வந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய **வருகைக்கும்**, உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்.

இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை **வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்;**

அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்.

நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்.

எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண் கொடுத்தும்,

ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக் கொண்டு போகுமட்டும் **உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்.**

அப்பொழுது, இரண்டு பேர் வயலில் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான்.

இரண்டு ஸ்திரீகள் ஏந்திரம் அரைத்துக்கொண்டிருப்பார்கள்; ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள்.

உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் **விழித்திருங்கள்.**

நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால் நீங்களும் **ஆயத்தமாயிருங்கள்** மத்.24:3-44.

எச்சரிக்கையாயிருங்கள்!
விழித்திருங்கள்!
ஆயத்தமாயிருங்கள்!

எனது பாடல் ஒன்றை எழுதி முதல் குறிப்பை முடிக்கிறேன். தயவு செய்து 3-வது சரணத்தை கவனியுங்கள்: **காட்டாறு போல் பாவம் ஜனங்களை கொல்லுதே, இரட்சகரே நேச கரத்தை நீட்டுமே,**

பாடல்

தனிமையை இனிமையாய் மாற்றிடும் இயேசுவே
உந்தனின் நேசத்தால் எந்தனை தேற்றுமே

1. பாரத்தால் நெஞ்சமே வேதனை கொள்ளுதே
பாடுகள் தீரவே வாருமே இயேசுவே
மூன்றாணியில் தொங்கி குருதியை சிந்தினீர்
முள் முடியோ சூடி எனக்காய் வேண்டினீர்

2. பொறுமையாய் தேவனின் சித்தமே செய்யவே
கிருபைகள் ஈந்திட வாருமே இயேசுவே
மன்றாடிடும் எந்தன் ஜெபங்களை கேட்டிடும்
இரங்குமே ஏழை என்னை தாங்குமே

3. சேவையில் தீவிரம் காட்டிட உந்தனின்
ஆவியைத் தந்திட வாருமே இயேசுவே
காட்டாறு போல் பாவம் ஜனங்களை கொல்லுதே
இரட்சகரே நேச கரத்தை நீட்டுமே

2. அவர்கள் அவன் ஆவியை விசனப்படுத்தினதினாலே, தன் உதடுகளினால் பதறிப் பேசினான் சங்.106:33

மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான் எண்.12:3. கர்த்தர் மோசேயை நோக்கி:

நீ கோலை எடுத்துக்கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும் சபையாரைக் கூடிவரச் செய்து, அவர்கள் கண்களுக்கு முன்னே **கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள்;** ... என்றார்.

மோசேயும் ஆரோனும் சபையாரைக் கன்மலைக்கு முன்பாகக் கூடிவரச் செய்தார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ என்று சொல்லி,

தன் கையை ஓங்கி, கன்மலையைத் தன் கோலினால் **இரண்டுதரம் அடித்தான்;** உடனே தண்ணீர் ஏராளமாய்ப் புறப்பட்டது, சபையார் குடித்தார்கள்; அவர்கள் மிருகங்களும் குடித்தது.

பின்பு கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம் பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற்போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை என்றார் எண்.20:7-12.

3. அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்துவாள் 1 சாமுவேல் 1:6.

எப்பிராயீம் மலைத் தேசத்திலிருக்கிற சோப்பீம் என்னப்பட்ட ராம தாயீம் ஊரானாகிய ஒரு மனுஷன் இருந்தான்; அவனுக்கு எல்கானா என்று பேர்;

அவனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள்; ஒருத்தி பேர் அன்னாள், மற்றவள் பேர் பெனின்னாள்; பெனின்னாளுக்குப் பிள்ளைகள் இருந்தார்கள்; அன்னாளுக்கோ பிள்ளை இல்லை 1 சாமுவேல் 1:1,2.

கர்த்தர் அவள் கர்ப்பத்தை அடைத்தபடியினால், அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்துவாள்.

அவள் கர்த்தருடைய ஆலயத்திற்குப் போகும் சமயத்தில், அவன் வருடந்தோறும் அந்தப் பிரகாரமாய்ச் செய்வான்; இவள் அவளை மனமடிவாக்

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குவாள்; அப்பொழுது அவள் சாப்பிடாமல் அழுது கொண்டிருப்பாள் 1 சாமு. 1:6,7.

சீலோவிலே அவர்கள் புசித்துக் குடித்த பின்பு, அன்னாள் எழுந்திருந்தாள்;

அவள் போய், மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி: ... என்று ஒரு பொருத்தனை பண்ணினாள் 1 சாமு.1:9-11.

அவள் கர்த்தருடைய சந்நிதியில் வெகுநேரம் விண்ணப்பம் பண்ணுகிறபோது, ஏலி அவளை நோக்கி: நீ எது வரைக்கும் வெறித்திருப்பாய்? உன் குடியை உன்னை விட்டு விலக்கு என்றான்.

அதற்கு அன்னாள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, என் ஆண்டவனே, நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ; நான் திராட்சரசமாகிலும் மதுவாகிலும் குடிக்கவில்லை; நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றி விட்டேன்

உம்முடைய அடியாளைப் பேலியாளின் மகளாக எண்ணாதேயும்; மிகுதியான விசாரத்தினாலும் கிலேசத்தினாலும் இந்நேரமட்டும் விண்ணப்பம் பண்ணினேன் என்றாள்.

அதற்கு ஏலி சமாதானத்துடனே போ, நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்குக் கட்டளையிடுவாராக என்றான் 1 சாமு.1:12-17.

அவர்கள் அதிகாலையில் எழுந்து, கர்த்தரைப் பணிந்து கொண்டு, ராமாவிலிருக்கிற தங்கள் வீட்டுக்குத் திரும்பிப் போனார்கள்; எல்கானா தன் மனைவியாகிய அன்னாளை அறிந்தான்; கர்த்தர் அவளை நினைத்தருளினார்.

சில நாள் சென்ற பின்பு அன்னாள் கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெற்று, கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன் என்று சொல்லி, அவனுக்கு சாமுவேல் என்று பேரிட்டாள் 1சாமு. 1:19,20.

கர்த்தர் தரித்திரம் அடையச் செய்கிறவரும், ஐசுவரியம் அடையப் பண்ணுகிறவருமாயிருக்கிறார்; அவர் தாழ்த்துகிறவரும், உயர்த்துகிறவருமானவர்.

அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார் என்று அன்னாள் துதித்தாள் 1 சாமுவேல் 2:7,8.

4. அவருடைய சீஷர்கள் அதைக் கண்டு விசனமடைந்து: இந்த வீண் செலவு என்னத்திற்கு? என்றார்கள் மத்.26:8.

ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற பரிமள தைலமுள்ள வெள்ளைக் கல் பரணியைக் கொண்டு வந்து, அவர் போஜனபந்தியிலிருக்கும் போது, அந்தத் தைலத்தை அவர் சிரசின் மேல் ஊற்றினாள் மத்.26:7.

சீஷர்கள் இந்த வீண் செலவு என்னத்திற்கு? தைலத்தை உயர்ந்த விலைக்கு விற்று, தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்றார்கள்.

இயேசு அதை அறிந்து, அவர்களை நோக்கி: என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள். இந்த சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப் படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் மத். 26:10-13.

பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்:

பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதுமில்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை.

உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் என்றார் இயேசு மத். 6:19-21.

5. அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன் 2 கொரி.9:7.

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் வருகையின் தூதன் ஊழியத்திற்கு கொடுப்பதைப் பற்றி எழுதி வருகிறேன். சுமார் **70** ஆண்டுகள் வருகையின் தூதன் ஊழியம் நடைபெற்று வருகிறது. எனது தகப்பனார் பாஸ்டர் **S.தேவதாசன்** அவர்கள் முயற்சியால் இந்தியாவில் **18** மொழிகளில் தூதன் செய்திகள் மொழி பெயர்க்கப்பட்டு வெவ்வேறு ஆசிரியர்களால் அச்சிடப்பட்டது. ஆனால் அந்த ஆசிரியர்கள் சுய ஆதரவோடு (Self Support) ஊழியத்தை நடத்தாததினால் இன்று சில மொழிகளில் மாத்திரம் தூதன் வெளிவருகிறது.

எல்லா கிறிஸ்தவ ஊழியங்களையும் போல வருகையின் தூதன் ஊழியத்தையும் மாதந்தோறும் தாங்குங்கள்

1. மாதந்தோறும் சுமார் 30 பக்கம் செய்திகள் ஆயத்தம் செய்யவேண்டும்
2. காகிதம்
3. அச்சுக் கூலி
4. அனுப்புவதற்கான செலவுகள்
5. தபால் செலவுகள்
6. அலுவலக செலவுகள்
7. வருகையின் தூதன் ஊழியர்களுக்கு சம்பளம்.

வழக்கமாக நான் இரண்டு சகோதரிகளை பற்றி எழுதுவேன். இந்த ஆண்டு இரண்டு சகோதரர்களைப் பற்றி எழுதுகிறேன்:

1.நெல்லை மாவட்டம் கன்னங்குளம் என்ற இடத்தைச் சேர்ந்த ஒரு அன்பான சகோதரர், அநேக ஆண்டுகளாக மாதந்தோறும் ரூபாய் **50** காணிக்கை அனுப்பி வருகிறார்.

2. சமீபத்தில் எனது நண்பர் ஒருவர் என்னை சந்தித்த போது பத்திரிகை அனுப்ப என்னை கேட்டுக் கொண்டார். நான் ஆராதனைக்காக செல்லும் சபையில் ஆரம்ப நாட்களில் இவர் ஆராதனை நடத்தி வந்தார். என்னுடன் சேர்ந்து மாலை நேர வேதாகம பாடசாலையில் படித்தவர்; ஆரம்ப பாடசாலை ஆசிரியராயிருந்து ஓய்வு பெற்றவர், இவர் **மாதந்தோறும்** வருகையின் தூதன் ஊழியத்திற்கு ரூபாய் 100 காணிக்கை அனுப்பி வருகிறார்.

இவர்களுக்காகவும், இது போல மாதந்தோறும் காணிக்கை அனுப்புகிற சிலருக்காகவும் நான் ஆண்டவரை துதிக்கிறேன். கர்த்தர் உங்களை ஏவினால் **2025 ஜனவரி** முதல் நீங்களும் வருகையின் தூதன் ஊழியத்திற்கு **மாதந்தோறும்** ஒரு சிறிய காணிக்கை அனுப்பும்படி அதிக அன்பாய் கேட்கிறேன்.

கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி ருன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார் இயேசு லூக்கா 6:38.

அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; **உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்** 2 கொரிந்.9:7.

"For God loveth a cheerful giver"

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உதவி : **94897 40295**
அலுவலகம் : **95432 21008**

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

ஜெபத்தின் வல்லமை சக்தி வாய்ந்தது

Mighty is the power of Prayer

E.M.Bounds

சபை தனக்கு அளிக்கப்பட்ட கட்டளையை நிறைவேற்ற ஜெபத்தின் மிகப் பெரிய முக்கியத்துவத்தை உணர வேண்டும். அதிகமான ஜெபமும், மேலான ஜெபமும் சபை தனக்கு ஆண்டவரும் எஜமானுமாகிய தேவன் கொடுத்த கடின மெல்லிய, பொறுப்பான காரியத்தை நிறைவேற்ற மிகவும் அவசியம். ஜெபக் குறைவுள்ள சபையில் தோல்வியே ஏற்படும். அதிகமாக ஜெபிக்கும் சபை வெற்றியடைவது மிக நிச்சயம்.

ஜெபத்தின் மூலமாகவே இயற்கைக்கு மேலான காரியங்கள் சபையில் நடைபெறுகின்றன. ஜெபமின்றி தோல்வியே மிஞ்சும். ஜெபம் முழு இருதயத்தோடும் முழுமனதோடும் செய்யப்பட வேண்டும். அப்போதுதான் சபை வளர்ந்து பெலனடைந்து தெய்வீக வாக்குத்தத்தங்களின்படி அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பிக்க முடியும்.

முழு இரட்சிப்பு நமது உயரிய சிறப்புரிமை

Full salvation our high privilege.

Andrew Murray (1828 -1917)

"அதற்குத் தகப்பன்: மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடைய தாயிருக்கிறது" லூக். 15:31

இளைய குமாரனுக்கு தந்தை காண்பித்த அன்பைக் குறித்து நாம் அதிகமாகப் பேசவும் எழுதவும் கூடும். ஆனால் அவர் தனது மூத்த மகனை நடத்திய விதம் ஒரு தகப்பனுடைய உண்மையான அன்பின் உணர்வை நமக்கு சிந்திக்க ஏதுவாக்குகிறது. எனவேதான் இப்பகுதியைத் தெரிந்து கொண்டேன். இதில் முதலாவது காணப்படுவது தேவ பிள்ளைகளின் சிறப்புரிமை. இரண்டாவது இது மிகக் குறைவான அளவில் அனுபவிக்கப் படுகிறது. மூன்றாவது இந்த மிகப் பெரிய முரண்பாட்டிற்கான காரணம். நான்காவதாக முழுமையான இரட்சிப்பைப் பெறுவதற்கான வழி.

தேவபிள்ளைகளின் மிகப் பெரிய சிறப்புரிமை

தகப்பனோடிருந்த மூத்த மகனுக்கு அவன் விரும்பினால் இரு சிறப்புரிமைகள் உண்டு. இடைவிடாத உறவும் அளவில்லாத பங்களிப்பும். ஆனால் இளைய குமாரனை விட மூத்தவன் கெட்டவனாயிருந்தான். வீட்டிலே இருந்தாலும் அவனுக்கிருந்த சிறப்புரிமைகளை ஒருபோதும் அறியவு மில்லை, அனுபவிக்கவுமில்லை, அவை யெல்லாம் தனக்குரியவை என புரிந்து கொள்ளவுமில்லை. நிறைவான ஐக்கியம் அவனுக்காகக் காத்திருந்தும், கொடுக் கப்பட்டிருந்தும் அவை ஏற்றுக் கொள்ளப்படவில்லை, இளையமகன் தூரமாகச் சென்றுவிட்டான். வீட்டில் இருந்தும் மூத்த மகன் வீட்டின் சந்தோஷங்களுக்குத் தூரமாயிருந்தான்.

இடைவிடாத ஐக்கியம்

உலகப் பிரகாரமான தந்தை தனது பிள்ளையை நேசித்து அவனை சந்தோஷப்படுத்துவதில் மகிழ்ச்சியடை கிறார். "தேவன் அன்பாகவே இருக் கிறார்" (1 யோ.4:8) தமது ஜனங்களுக்கு தமது இயற்கையை ஊற்றிக் கொடுக்க விரும்புகிறார். அநேகர் தேவன் தமது முகத்தை மறைத்துக் கொள்வதாகக் குறை கூறுகிறார்கள். அப்படி அவர் முகத்தை மறைக்க பாவம் அல்லது அவிசுவாசம் மட்டுமே காரணமாயிருக் கக் கூடும். வேறு எதுவுமே இருக்க முடியாது. சூரியனுடைய தன்மை பிரகாசிப்பது. அது பிரகாசிக்காமலி ருக்க முடியாது. "தேவன் அன்பாகவே இருக்கிறார்", அவர் அன்புகூராமலிருக்க முடியாது. தேவனற்றவர்களிடமும் அவர் நன்மை செய்கிறார். தவறு செய் பவர்களிடமும் அவர் மனவுருக்கமுள்ள வராயிருக்கிறார். அவரது தந்தைப் பாசம் எல்லாப் பிள்ளைகள் மீதும் செலுத்தப்படுகிறது. எப்போதும் சந்தோஷமாக தேவனுக்குள் வாசம் பண்ணக் கூடுமா? என்று கேட்டால் பதில் நிச்சயமாக 'ஆம்' என்பதாகும். அதற்கு விடையாக பல வேத பகுதிகளு முண்டு. எபிரேயர் 10:19-20 வசனங் களில் "பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப் பதற்கு மாம்சமான திரையின் வழியாய் தைரியம் அளித்திருக்கிறார்" என படிக்கி றோம். தாவீது சொல்லும் போது, 'கூடார மறைவில் வைத்து' என்றும் 'சர்வவல்லவரின் நிழலில்' என்றும் (சங்.27:5; 91:1) படிக்கலாம்.

எனது செய்தி என்னவெனில் உங்கள் கர்த்தராகிய தேவன், நீங்கள் தொடர்ந்து அவரது முகப்பிரகாசத்தில் வாழவேண்டும் என்பதாகும். உங்கள் தொழில், உங்கள் மனநிலை, உங்கள் சூழ்நிலை ஏதோ ஒன்று தடையென்று கூறுவீர்களானால் அது தேவனை விட பெரிதானதா? நீங்கள் தேவனிடம் வந்து உங்கள் மீது பிரகாசிக்கும்படி கேட்டால் அவர் அதைச் செய்வார். ஒரு விசுவாசி யாக நாள் முழுவதும், எல்லா நாளும் அவரது அன்பின் ஒளியில் நடக்க முடியும். அதுவே முழுமையான இரட்சிப்பு. "எப்போதும் உம்மோடு" "இதை நான் முன்பு அறியாதிருந்தேன் ஆண்டவரே, எனவே அதை அனுபவி யாதிருந்தேன். இப்போது அதை நான் அறிகிறேன்".

இணைந்த பங்களிப்பு

"எனக்குரியவைகளெல்லாம் உன்னுடையவைகள்". மூத்த மகன் தந்தை தன் இளைய மகனை அன்போடு ஏற்றுக்கொண்டதைக் குறை கூறு கிறான். தனக்கு ஒரு ஆட்டுக்குட்டியா கிலும் தன் சிநேகிதரோடு சேர்ந்து கொண்டாடும்படி கொடுக்கவில்லை என்றும், இளையவன் வந்த போதோ பெரிய விருந்து கொண்டாடியதாகப் புலம்புகிறான். (லூக்.15:29) தந்தை தமது உருக்கமான அன்போடு கூறும் பதில்: 'மகனே நீ எப்போதும் என்னோடு இந்த வீட்டில் இருக்கிறாய், நீ என்னிடத்தில் கேட்டால் மட்டும் போதும், நீ கேட்ட எல்லாவற்றையும் பெற்றிருப்பாய்'. இதுவே நமது பரம தந்தை தமது பிள்ளைகளுக்குச் சொல்லும் பதில். ஆனால் நாம் என்ன சொல்லுகிறோம்? "நான் மிகவும் பலவீனமானவன், எனது பாவங்களை என்னால் மேற்கொள்ள முடியாது, என்னால் எதுவுமே சாத்திய மில்லை". அல்லவே அல்ல, தேவனால் எல்லாம் கூடும். அவர் உங்களிடம் "எனக்குள்ளதெல்லாம் உனக்குரியதே. கிறிஸ்துவில் எல்லாவற்றையும் உனக்கு அளித்திருக்கிறேன். ஆவியானவரின் அனைத்து வல்லமை, ஞானம், ஐசுவரியம், பிதாவின் அன்பு, எல்லாமே உனக்குரியதுதான். நான் தேவனா யிருந்து உன்னை நேசித்து பாதுகாத்து ஆசீர்வதிப்பேன்" என்கிறார். தேவன் இப்படிப் பேசினாலும் அநேகருக்கு அது ஒரு சொப்பனமாயிருக்கிறது. நீங்கள் ஏன் தரித்திரராயிருக்க வேண்டும்? தேவனுடைய வார்த்தை உறுதியானது. அவர் வாக்குப் பண்ணியிருக்கிறார். யோவான் 14 முதல் 16 அதிகாரம் வரை இயேசுவின் நாமத்தில் அவரிடம் வருவ தாயிருந்தால் அதிசயமான பதில்களைப் பெறுவோமென உறுதிபடக் கூறுகிறார். ஒரு கிறிஸ்தவனாக இத்தகைய வாழ்வைப் பெறலாமென விசுவாசிக் கிறீர்களா?

தாழ்வான அனுபவம்

இரண்டாவது குறிப்பைப் பாருங்கள். தாழ்வான அனுபவம் என்றால் என்ன? ஏழ்மையிலும் பட்டினி யிலும் வாழ்வதுதான். மூத்த மகன் ஐசுவரியவானுடைய மகனாயிருந்தும் ஏழ்மையில் வாழுகிறான். 'எப்போதா வது ஒரு ஆட்டுக்குட்டியையாகிலும்' எனக் கூறுவது அநேகக் கிறிஸ்தவர் களுடைய நிலையைக் காட்டுகிறது. அவரோடு நாம் முழுமையான உறவின் ஆசீர்வாதங்களைப் பெற தேவன் விரும்பும் போது நாம் எத்தனை வேறுபாட்டுடன் காணப்படுகிறோம்.

தொழிலதிபரிடம் ஏன் அவர் எப்போதும் சந்தோஷமாகவும் தூய்மை யாகவும் வாழ முடியவில்லை என்று கேட்டால், அவரது பதில், 'இந்தத் தொழிலில் எப்படி சந்தோஷமாகவும் தூய்மையாகவும் இருக்க முடியும்?' என்பார். அவர்களது மனோபாவனை யின் ஆசீர்வாதம், பெருமூச்சும், துக்கமும், தொல்லையுமே.

ஒரு சகோதரியிடம் வாழ்வு எப்படிச் சென்று கொண்டிருக்கிறது என்று கேட்டதற்குப் பதிலாக, அது சில வேளைகளில் வெளிச்சமாகவும், மற்றும் சில வேளைகளில் இருளாகவும் இருப்ப தாகக் கூறிவிட்டு, இது இயற்கை யானது, பரலோகத்திலும் இப்படியே யிருக்கும் என்றாள். எத்தனை மோசமான அனுபவம்! ஆனால் வேத புஸ்தகத்தில் அவ்வாறு கூறப்பட வில்லை. பதிலாக "சூரியன் இனி அஸ்தமிப்பதில்லை" (ஏசா.60:20) என படிக்கிறோம். ஆயினும் சிலருக்கு அங்கு நன்மையேயில்லை என்ற எண்ணம்தானிருக்கிறது. நான் முன்பு கூறியது போல நமது பாவமும் அவிசுவாசமுமே அவருடைய முகத்தை நம்மை விட்டு மறைக்கும். ஆவிக்குரிய தரித்திரராயிருந்தால் சந்தோஷம், வெற்றி இவற்றைப் பெற முடியாது. கோபம், அலைச்சல் இவையே மிஞ்சும். "நான் பலவீனன், விழுந்து விடுவேன்" என்று ஏன் நீங்களே சொல்லுகிறீர்கள்? ஆனால் வேத வாக்கியம் என்ன சொல்லு கிறது? "**வழுவாதபடி உங்களைக் காக்கிறவர்.**" (யூதா.24) ஒரு ஊழியக் காரர் ஒரு முறை "**வசனம் இப்படிக் கூறினாலும் அவர் அதைச் செய்ய சித்த முள்ளவர் என்று சொல்லவில்லையே**" என்றார். தேவன் பரிகாசம் பண்ணு கிறவரல்ல, அவர் '**கூடும்**' என்று கூறினால் அது அவரது சித்தத்தின்

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நிரூபணம். நாம் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து நமது அனுபவங்களை அதன் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்ப்போமாக.

மேலும் நீங்கள் தேவனுக்காக மிகுந்த கனி கொடுக்க, உழைக்கிறீர்களா? மக்கள் உங்களைப் பார்த்து "அவனோடு தேவனிருக்கிறார், அவனை தாழ்மையுள்ளவனாகவும், பரிசுத்தமாகவும், பரம சிந்தையுள்ளவனாகவும் காத்து வருகிறார்" என்று சொல்கிறார்களா? அல்லது நீங்கள் ஒரு சாதாரண கிறிஸ்தவர், எளிதில் கோபமடையக் கூடியவர், லௌகீகமானவர், பரம சிந்தையற்றவர் என்கிறார்களா? நமக்கு ஒரு ஐசுவரியவானான தந்தை இருக்கிறார். உலக தந்தை தன் பிள்ளை பாதரட்சையின்றியும், சரியான ஆடையின்றியும் அலைவதை விரும்பாதது போல நமது பரமபிதா நமது வாழ்வை மேலான தெரிந்தெடுக்கப்பட்ட ஆசீர்வாதங்களால் நிரப்ப விரும்புகிறார்.

எத்தனையோ வேதபாட ஆசிரியர்கள் பிள்ளைகளுக்குப் போதித்தும் பிள்ளைகள் மனம்மாறச் செய்ய முடியவில்லை. ஏனெனில் அவர்களுக்கு தேவனோடு நெருங்கிய தொடர்பு இல்லை. பாவத்தின் மேல் வெற்றி, உலகத்தை சீர்ப்படுத்த வல்லமை இல்லை. நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? தாழ்ந்த நிலையில் இருக்கிறீர்களா? உயர் நிலையிலிருக்கிறீர்களா? அறிக்கையிடுங்கள். இந்த இரு குமாரர்களும் இரு வகையான கிறிஸ்தவர்களைக் காண்பிக்கிறார்கள். இளையகுமாரன் தேவனை விட்டுப் பின்மாறிப் போனவன். மூத்த குமாரன் தேவனோடு முழு ஐக்கியமில்லாதவன். இருவரும் ஒன்று போல தரித்திரர். மூத்த மகனும் இளைய வனைப் போல வாழ்க்கையில் மாற்றங்கள் தேவைப்பட்டவன். அவன் மனந்திரும்பி, அறிக்கை செய்து தனது முழு சாவகாசங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டியவன். அப்படியே தாழ்நிலை கிறிஸ்தவர்களும் மனந்திரும்பி அறிக்கையிட்டு முழு இரட்சிப்பைப் பெற வேண்டும். இருவரும் 'தந்தையே, தவறு செய்து விட்டேன்' என்று சொல்ல வேண்டும்.

பெரிய முரண்பாட்டின் காரணம்

அனுபவத்தில் ஏன் இந்த முரண்பாடு? நான் முழு ஆசீர்வாதத்தையும் அனுபவிக்கவில்லையே? வேத வசனம் சொல்லுகிறபடியும், பலர் சொல்லுகிறபடியும் நான் ஏன் முழு ஆசீர்வாதத்தைப் பெறவில்லை? ஆண்டவரே, நீர் விரும்புகிறபடி நான் ஏன் வாழ முடியவில்லை?

இந்தக் கதையே அதற்கு விடையளிக்கிறது. மூத்த மகன் தான் குமாரனல்ல என்ற ஆவியையும், தவறான எண்ணங்களையும் உடையவனாயிருக்கிறான். நீங்களும் உங்கள் பரம தகப்பனுடைய உண்மையான குணாதிசயத்தை அறிந்திருந்தால் உங்கள் வாழ்வு சரியாயிருக்கும். "என் சிநேகிதரோடே சந்தோஷப்பட ஒரு ஆட்டுக் குட்டியையாகிலும் தரவில்லையே." எனது தந்தை ஐசுவரியவான்தான்; ஆனால் அவர் எனக்குக் கொடுக்கிறதில்லை. அநேகர் பெற்றுக்கொண்டதாகவும் நிரப்பப்பட்டதாகவும் கூறுகிறார்கள், ஆனால் என்னை அவர் நிரப்பவில்லையே என்கிறோமா?

ஒரு அன்பான ஊழியக்காரர் என்னிடம் இத்தகைய வாழ்வு, எல்லாருக்குமுரியதல்ல, சர்வவல்லவர் தமக்குப் பிரியமானவர்களுக்கு இதனை அளிக்கிறார் என்றார். நண்பர்களே, சர்வ வல்லவரின் இறையாண்மையில் எந்த சந்தேகமும் இல்லை. அவர் தமது வரங்களை தமக்கு சித்தமானபடி விநியோகிக்கிறார்; நாம் அனைவரும் பவுல்களோ அல்லது பேதுருக்களோ அல்ல; அவருடைய வலது மற்றும் இடது பாரிசத்தில் உள்ள இடங்கள் அவர் விரும்பும் எவருக்கும் தயாராக உள்ளது, ஆனால் இது தெய்வீக இறையாண்மை பற்றிய விஷயம் அல்ல; இது குழந்தையின் சுதந்திரத்தின் கேள்வி. தந்தையின் அன்பு எல்லாப் பிள்ளைகளுக்கும் உண்மையான அனுபவத்தில் அவரது முழு இரட்சிப்பை கொடுக்க முன் வருகிறது.

ஒரு உலக தந்தையை எடுத்துக் கொள்வோம். அவர் பிள்ளைகள் வெவ் வேறு வயதை உடையவர்களாயிருந்தும் தகப்பனுடைய முகத்தைப் பார்க்க, சந்தோஷப்பட சம உரிமை உண்டே. ஐந்து வயது மகனை விட இருபது வயது மகனுக்கு அதிகச் செலவு செய்யலாம். மூன்று வயது பிள்ளையிடம் பேசுவதை விட பதினைந்து வயது மகனிடம் அதிகம் பேசலாம். ஆனால் அவர்கள் மீதான அன்பை பொறுத்தவரையில் அது ஒன்றுதான், பிள்ளைகள் என்ற சிலாக்கியத்தில் எல்லாரும் ஒரே மாதிரியானவர்கள்.

தேவன் தம்முடைய அன்பான பிள்ளைகள் மீது வைத்திருக்கும் அன்பு ஒன்று போலுள்ளது. அவர் மேல் பழியைப் போட வேண்டாம். ஆனால் "நான் உம்மைப்பற்றி கடின எண்ணங்கள் கொண்டேன், நான் பாவம் செய்து விட்டேன். ஒரு தகப்பனாக, தேவன் எனக்காகச் செய்ய முடியும் மற்றும் செய்யத் தயாராக இருக்கிறார் என்று நான் விசுவாசியாததை நான் என் பிள்ளைகளுக்குச் செய்திருக்கிறேன், மேலும் குழந்தை போன்ற விசுவாசம் எனக்கில்லை" என்று சொல்வோமாக. தேவனுடைய சித்தம், வல்லமை, அன்பு இவற்றை விசுவாசியுங்கள். அவர் முழு இரட்சிப்பைத் தந்து ஒரு மாற்றத்தை அளிப்பது நிச்சயம்.

புதுப்பிக்கும் வழி

இப்போது நம்மை மறுபடியும் புதுப்பித்து இந்த மோசமான அனுபவத்திலிருந்து வெளியேறுவது எப்படி? அவரைவிட்டு தூரமாக சென்ற இளைய மகன் மனந்திரும்பியது போல, அவரது பார்வையில் வாழும் (மூத்த மகன்) பிள்ளைகளும் அவரது வாக்குத்தத்தங்களை அனுபவியாமலிருக்கும் நிலையிலிருந்து மனந்திரும்ப வேண்டும். சபையிலுள்ள அநேகர் முழுமையான இரட்சிப்பை பெற நீண்ட காலமாகும் என எண்ணுகின்றனர். ஆம், நீங்களே முயற்சி செய்தால் அப்படியாகும், நடக்காமலே இருப்பதும் உண்டு. இல்லை, நண்பரே, நீங்கள் தேவனை நம்பி அவரிடம் வந்தால் அவர் ஒரே நிமிடத்தில் அதைத் தருவார். **பாவத்திலும் பெலவீனத்திலும் இருக்கும் நீ அன்பு தந்தையின் மார்பில் சாய்ந்து கொள்.** தேவன் உன்னை விடுவிப்பார். இருளிலிருந்து ஒளிக்குள் வர ஒரே ஒரு அடி மட்டுமே. "பிதாவே உம்மோடிருந்தும் உமது அன்பை விசுவாசியாத நான் எவ்வளவு மோசமானவன்" என்று சொல்லுங்கள்.

'மனந்திரும்பு' என்னும் அழைப்பைக் கேட்டு இன்று மன்னிப்புடைய உம்மிடம் வருகிறேன்.

தேவனைக் குறித்த கடின எண்ணங்கள் கொண்டிருந்தீர்கள். நன்மையானவைகளுக்கான வாஞ்சையோ, பசியோ, தாகமோ இல்லை. வாருங்கள் மனந்திரும்புங்கள், உங்கள் அவிசுவாசமாகிய பாவத்தை அவர் மன்னிப்பார் என்று விசுவாசிக்க மட்டும் செய்யுங்கள். அவிசுவாசத்தால் தேவனை கனவீனம் பண்ணாமல் இன்றே அவரிடம் வந்து முழு இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள். பின்பு அவர் பாதுகாத்துக் கொள்வார் என்று நம்புங்கள். சிலருக்கு இது கடினமாகத் தோன்றலாம். ஆனால் இதில் கடினமே இல்லை. தேவன் தமது ஒளியை உங்கள் மீது பிரகாசிக்கச் செய்து, "மகனே நீ எப்போதும் என்னோடிருக்கிறாய். நீ செய்ய வேண்டியதெல்லாம் என்னோடு வாழ்ந்து எனது ஒளியில் நட" என்பது மட்டுமே.

இருவகையான கிறிஸ்தவர்களுண்டு: முழு இரட்சிப்பை அனுபவிப்பவர்களும் மற்றும் அதைப் புரிந்து கொள்ளாத இன்னொரு சாராருமாகும். இது உங்களுக்கு தெளிவாயிராவிட்டால் தேவனிடம் இதைத் தெளிவுபடுத்திக் கேளுங்கள். புரிந்து கொண்டால் அது ஒரு நிச்சயமான செயலாயிருக்கட்டும். தேவனுடைய அரவணைக்கும் கரங்களுக்குள் செல்லுங்கள். அவர் "எல்லாம் உன்னுடையது" என்று சொல்லும் போது "தேவனுக்கே புகழ்ச்சி, நான் விசுவாசிக்கிறேன், நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். நான் என்னை அவருக்கே அர்ப்பணிக்கிறேன். அவர் இப்போது தம்மை எனக்காகக் கொடுக்கிறார் என்று விசுவாசிக்கிறேன்" என்று சொல்லுங்கள்.

"ஓ என் பிதாவே, உமது முழுமையான இரட்சிப்பின் அனுபவத்தில் என்னை கொண்டு வரும்."

முக்கிய அறிவிப்பு

வங்கி வழியாக (Net Banking) காணிக்கை அனுப்பிய வாசகர்கள் உடனே எங்களுக்கு Phone பண்ணுங்கள் அல்லது SMS or Whatsapp அனுப்புங்கள்.

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

உங்களிலுள்ள தேவ ஆவியின்படி உங்கள் வாழ்வை அளப்பீர்களாக

Measure your life by God's spirit within you

Wesley Duewel (1916-2016)

வேத வாக்கியங்கள் சிலர் ஆவியால் நிரப்பப்பட்டதைக் குறித்து கூறிவிட்டு, நம்மையும் ஆவியால் நிரம்பும்படி கட்டளையிடுகிறது.(எபே.5:18) அப்போஸ்தலருக்கு அருளப்பட்ட அதே அளவு ஆவிக்குரிய அனுபவம் நமக்கும் வாக்குப் பண்ணப்பட்டுள்ளது (அப்.2:38-39) உங்கள் வாழ்வில் எவ்வளவு தேவ ஆவியால் நிரப்பப் பட்டுள்ளீர்கள் என்பதை துணிந்து அளப்பீர்களா?

தேவனுடைய கரம் உங்கள் மீது வைக்கப்பட்ட காலங்களையும் அவரது வல்லமை உங்கள் ஊழியத்தில் வெளிப்பட்டதையும் நீங்கள் அறிவீர்கள். அது மறுக்க முடியாதது. அது ஆச்சரியப் படத்தக்கதல்ல. ஏனேனில் அது ஆவி யானவரின் கிரியை. அவர் கிறிஸ்துவுக்குப் பதிலாக செயல்படுகிறவராக வந்தார். அவர் மீட்பை செயல் படுத்துவதிலும் அதினால் நமக்கு ஏற்படும் பலனையும் தர தீவிரமாய் ஈடுபட்டார்.

ஆவிக்குரிய வாழ்வெல்லாம் ஜீவனைக் கொடுக்கும் ஆவியால் வருகிறது. தேவனால் பிறப்பது என்பது ஆவியினால் பிறப்பதாகும்.(யோ. 3:3-8) அது மட்டும் அளப்பதற்குரிய ஆவிக் குரிய வாழ்வில்லை. "**கிறிஸ்துவின் ஆவியில்லா தவன் அவருடையவனல்ல**" (ரோ. 8:9) கிறிஸ்து வுடைய ஒவ்வொருவரும் அவர்களில் தூய ஆவியைப் பெற்றிருக்கிறார்கள். சில கிறிஸ்தவர்கள் ஆவியானவரின் பிரசன்னத்தால் மிகவும் விசேஷமாய் அடையாளப்படுத்தப்படுகிறார்கள்.

நாம் ஆவிக்குரிய வாழ்வைப் பெறவும், அதைப் பூரணமாய்ப் பெறவும் இயேசு இவ்வுலகில் வந்தார். (யோ.10:10) அவரது பூரண நிறைவோடு நம்மில் வாசம் பண்ண அவர் அருளப்பட்டார். முடிவுள்ள மக்களாகிய நம்மை அவரது தூய, சர்வ வல்ல நபரத்துவம் நிரப்ப வாஞ்சையோடிருக்கிறது.

ஆவியானவரின் நபரத்துவமும் பணியும்

அவர் பரிசுத்தமும் அன்பும் நிறைந்தவர். திரித்துவத்தில் மூன்றாவ தானவர். அவர் அமைதலாகப் பனி போல இறங்கி நம்மைப் புதுப்பிக்கிற ஆசீர்வதிக்கப்பட்டவர். ஒரு நீரூற்றைப் போல ஆசீர்வாதங்களை உங்களில் எழும்பப் பண்ணுகிறார். ஆசீர்வாதத் தின் நதியாக உங்களிலிருந்து பாய்ந்து ஓடுகிறார். பழைய ஏற்பாட்டின் காலத்தில் தீர்க்கத்தரிசிகள் பிரத்தியேகப் படுத்தப்பட்டு அபிஷேகம் பண்ணப் பட்டது போல் நீங்கள் அபிஷேகிக்கப் படுவீர்கள். தமது தூய ஆவியின் அக்கினியால் முற்றிலும் கழுகி சுத்தப் படுத்துவார். உங்களுக்குள்ளிருந்து தூய பாரம், அன்பு மற்றும் உற்சாகத்தால் நீங்கள் பற்றியெரியச் செய்வார். இவை எல்லாவற்றையும் அழகாகவும் வியப் பூட்டுவதாகவும் செய்கிறார்.

எல்லாவற்றிற்கும் மேலான உண்மை என்னவெனில் அவர் உங்க ளுக்குள் வாசம்பண்ணும் பரிசுத்த நண்பர், ஆலோசகர், வழிநடத்துபவர், உதவியாளர் மற்றும் ஆண்டவர். அவர் கிறிஸ்துவின் மீட்பின் கிருபையை உங்கள் இருதயங்களில் தந்து, தூய்மை யாய் வாழவும், சேவை செய்யவும், தேவனுக்காக ஆவிக்குரிய போராட்டத் தில் ஈடுபடவும் வலுப்படுத்துகிறார்.

ஒரு விசுவாசியாக உங்களை முழுவதும் அர்ப்பணிக்கும் போது ஆவி யானவர் உங்களைக் கழுகி சுத்திகரிக் கிறார். (யோவா.17:17, அப்.15:8-9, 2தெச.2:13) மேலும் உங்களை நிரப்புகிறார். (அப்.2:4;39; எபே.5:18) அவரது முழுமை யான கர்த்தத்துவத்தையும் உங்களில் செயல்படச் செய்து, உங்களை வெற்றி யுள்ளவர்களாகவும் வல்லமையுள்ளவர் களாகவுமாக்கி கிறிஸ்துவுக்கு சேவை செய்ய பயன்படுத்துவார். (லூக்.24:49;அப்1:8)

ஆவியானவர் ரோமர் 8:23; கலா.5:22,23 வசனங்களில் கூறப்படுவது போல உங்களில் விடுதலையாகப் பெருகி கிறிஸ்துவின் சாயலைப் பெறச் செய்து, ஆவியின் கனி தர வழி நடத்து வார். உங்களை மேலும் மேலும் கிறிஸ்து வின் சாயலுக்கொப்பாக மாற்றுவார். உங்கள் சுயத்தை அர்ப்பணிக்கச்செய்து, உங்களை முற்றிலும் ஆட்கொண்டு, தமது தெய்வீகப் பணிதனை உங்களி லிருந்து கொண்டே நிறைவேற்றுவார். உங்களை அவர் வழிநடத்துவார். (ரோமர்.8:14; ஏசா.58:11) அவர் உங்கள் ஆலோசகர். (யோ.14:26) அவர் உங்கள் ஜெபத்தை வலுப்படுத்துவார். (ரோமர் 8:26,27) அவர் உங்கள் வல்ல உதவியாளர். (யோ.14:26)அவர்உங்களைஅபிஷேகிப் பார். (2கொரி.1:21-22; 1யோ 2:20,27)

ஒரு தேவபிள்ளையாக இது ஒரு சிறந்த வாய்ப்பு. அதாவது தூய ஆவி யானவர் தாமே நம்மில் வாசம் பண்ணி, நம்மை நிரப்பி, வல்லமைப்படுத்து கிறார். ஒரு முறை முழுமையான அர்ப்பணம் செய்யும் போது, அவர் நம்மைக் கழுவி நிரப்பினாலும் மறுபடியும் மறுபடியும் நிரப்புவார். ஏனெனில் நீங்கள் அவரது கர்த்தத்து வத்தின் கீழ் வாழ்ந்து அவரை சேவிக் கிறீர்கள். கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். (லூக்.11:13)

கவனமாக மதிப்பிடுதல்

உங்கள் வாழ்வை அளந்து பாருங்கள், அதை மதிப்பிடுங்கள். உங்கள் அழைப்புக்கு எவ்வளவாக முழுமை யாக வாழுகிறீர்கள்? இயேசு அவரது ஆவியால் உங்களை முற்றிலும் சுத்திகரிக் கிறார். (1தெச.5:23-24) அதன்பின் நீங்கள் அதனை எப்படி காத்துக் கொள்கிறீர்கள்?

அநேக பாடல்கள் கிர்த உண்மையை வெளிப்படுத்துகின்றன. சார்லஸ் வெஸ்லி இப்படி எழுதினார்:

ஆ! என்னில் அந்த புனித அக்கினி
இப்போது ஜுவாலிக்க ஆரம்பிக்கட்டும்
தரமற்ற ஆசையாகிய அழுக்கு எரிக்கப்பட்டு,
மலைகள் உருகி ஓடச் செய்யட்டும்

தூய்மைப்படுத்தும் அக்கினியே, என் இதயம்
வழியாகச் சென்று
எனது ஆத்துமாவை ஒளியூட்டும்
ஒவ்வொரு பகுதியிலும் தமது ஜீவனை
பரவச்செய்து
முழுமையாக சுத்திகரியும்

உங்களில் தூய ஆவியானவர் வாசம் செய்யும் போது அவரது எரிக்கும் அக்கினியால் உங்கள் வாழ்வை அளக்க வேண்டும். அவர் உங்களை நிரப்பி சுத்திகரிக்கும் அளவுக்கு நீங்கள் முழு அர்ப்பணம் செய்துவிட்டீர்களா? ஆவியானவரின் குறைந்த அளவிலான பிரசன்னம் மற்றும் வல்லமை மட்டுமே உங்கள் வாழ்வில் காணப்படுகிறதா? அவரது தூய பிரசன்னத்தால் உங்களை நிரப்பி வழிந்தோடச் செய்வது உங்கள் உண்மையான அனுபவம்தானா?

ஆவியின் கனி திரளாக வெளிப் படுவதன் மூலம் உங்கள் வாழ்வை அளக்கலாம். உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் அதன் எல்லா பகுதிகளும் தொடர்ந்து வெளிப்படுகிறதா? அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், சாந்தம், இச்சையடக்கம் (கலா.5:22-23) இவற்றில் ஏதேனும் குறைவுபடுகிறதா?

அடுத்த வசனத்தில் சிலுவையி லறையப்பட்ட வாழ்வை இன்னொரு விதமாகக் கூறுகிறார்: "கிறிஸ்துவினு டையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்."(வச.24) சிலுவை யிலறையப்பட்ட தன்மை ஒன்றே. தடையில்லாமல் ஆவியின் கனியை உருவாக்க முடியும். நீங்கள் சிலுவை யிலறையப்பட்டு விட்டீர்களா? பவுல் இவ்வாறு தொடருகிறார்: "நாம் ஆவி யினாலே பிழைத்திருந்தால், ஆவிக் கேற்றபடி நடக்கவும் கடவோம்."(வச.25) ஆவியானவர்தான் குருசிலறையப்பட்ட வாழ்வை நிஜமாக்கி, ஆவியின் தெய்வீகக் கனி கொடுக்கச் செய்து அவரோடு அடியெடுத்து வைக்க உதவுகிறார்.

ஆவியின் நிறைவு என்பது ஆவியானவர் நம்மிலிருந்து நம்மை முழுவதும் ஆட்கொண்டு, முழுவதும் பயன்படுத்துவதாகும். ஆவியின் கனி என்பது அவரது தூய்மையின் நிறைவும், வாழ்வும் நம்மிலிருப்பதை நம்மூலமாக வெளிப்படுத்துவதாகும். அவர் சந்தோ ஷத்தின் ஆவியானவராய் உங்களுக் குள்ளும், உங்கள் மூலமாகவும் கனி கூருகிறவர். அவர் ஒரு அளவு அன்பைத் தருகிறவரல்ல, அவரே அன்பாயிருக் கிறார். அவர் உங்களுக்குள்ளும் உங்கள் மூலமாகவும்அன்புதனை நிரப்புகிறார். ஒரு அளவு வல்லமையை அவர் நம்மில் சேமித்து வைப்பதில்லை. அவர் சர்வ வல்லவர். அவரது தூய வல்லமையை உங்களுக்குள் அளித்து பலப்படுத்தி தூய வாழ்வுக்கும் பயனுள்ள சேவைக்கும் வழிநடத்துகிறார். அவர் ஓரளவு தூய்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மையை அளிப்பதில்லை. **அவர் தூயவர்**. அவர் நம்மில் வாழ்வதால் அந்த தூய தன்மை நம்மூலம் வெளிப்படுத்தப் படுகிறது.

மெல்லிய மற்றும் வல்லமை யுள்ள தேவஆவிக்கு உங்கள் பிரதிவினை யின்படி உங்கள் வாழ்வினை அளக்க லாம். அவர் மேலுள்ள பசியின் மூலம் அளக்கலாம். பசியுள்ளவர்கள் பாக்கிய வான்கள். அவர்கள் திருப்தியடை வார்கள். *(மத்.5:6; ஏசா.55:1,2)* எவ்வளவு பசியோடிருக்கிறீர்களோ, அவ்வளவாக அவர் உங்களை நிரப்புவார், எவ்வளவு ஆழமாகவும் தொடர்பாகவும் ஆவி யானவரின் பிரசன்னத்துக்காகவும், கிரியைக்காகவும் அவரது சித்தம் ஆகிய வற்றிற்காகவும் அதிக பசி தாகம் வாஞ்சையோடிருக்கிறீர்கள்? உங்கள் வாழ்வில் உங்கள் இருதயம் எவ்வளவாக தேவனை வாஞ்சித்துக் கதறுகிறது *(சங்.42:1)* என்ற அடிப்படையில் உங்கள் வாழ்வை அளக்கலாம்.

எவ்வளவாக முழுமையாக ஆவியானவருக்கு அர்ப்பணித்திருக்கிறீர்கள் என்பதிலிருந்து உங்கள் வாழ்வை அளக் கலாம். நீங்கள் அனுமதிக்கிற அளவில் அவர் உங்களை ஆட்கொள்வார். அவரது சித்தத்தை முழுமையாக ஏற்றுக் கொள்வது, நமது சித்தத்தை விட அவரது சித்தத்தில் வாஞ்சையாயிருப்பது ஆகியவற்றால் உங்கள் வாழ்வை அளக்கலாம். முற்றிலும் சுயம் அவருக் காக புறம்பாக்கப்பட வேண்டும்.

உங்கள் கீழ்ப்படிதல், மூலமாக வாழ்வை அளக்கலாம். முற்றிலும் கீழ்ப்படிதல், தொடர் கீழ்ப்படிதல், உடனடி கீழ்ப்படிதல், மகிழ்ச்சியுடன் கீழ்ப்படிதல் இவை வாழ்வை அளக்க முடியும். கீழ்ப்படிகிறவர்களுக்கு அவர் தூய ஆவியை அருளுகிறார்.*(அப்.5:32)* எவ்வளவாகக் கீழ்ப்படிகிறோமோ அவ்வளவாக முழுவதுமாக அவர் நம்மில் வாசம் பண்ணி நம்மூலம் கிரியை செய்கிறார்.

உங்களுக்குள்ளும், உங்கள் மூலமாகவும் ஆவியானவர் வெளிப் படுத்துவதின் மூலம் வாழ்வு அளக்கப் படலாம். அவரது தாழ்மை நம்மில் காணப்பட வேண்டும். நாம் வெறுமை யானவர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? சுயத்தைச் சார்ந்து வாழு கிறீர்களா? மாம்ச ஆசை உணர்வுகள் நீங்கிவிட்டனவா? அவரது தூய்மை நம்மில் காணப்படுகிறதா? அவரது அன்பு இருதயத்தை நிரப்புகிறதா? அல்லது அது பெயரளவில் காணப் படுகிறதா? ஆவியானவரைத் தொடர்ந்து களிக்கூரப்பண்ணுகிறீர்களா? அவர் மூலமாக மனதுருக்கம் பொறுமை போன்ற பண்புகள் உங்களில் காணப் படுகிறதா?

தொடர்ந்து தேவன் நம்மை வழிநடத்துவதின் மூலம் நம் வாழ்வை அளக்கலாம். நமது பேச்சு, ஜெப வாழ்வு, சாட்சி, ஆத்தும ஆதாயம், அனுதின வாழ்வில் எடுக்கும் தீர்மானங்கள் இவற்றாலும் வாழ்வினை அளக்கலாம். மேலும் எவ்வளவு அதிகமாக அவர் உங்கள் சேவைகளை அபிஷேகிக்கிறார், உங்கள் மூலம் பிறர் பாவ உணர் வடையச் செய்கிறார், உங்கள் செயல் களை ஆசீர்வதிக்கிறார் என்பவைகள் வழியாகவும் நம் வாழ்வை அளக்கலாம்.

எந்த அளவில் தூய ஆவியானவர் நம்மில் வாசம் செய்து அவரது வாழ்வு, அன்பு, பரிசுத்தம், பிரகாசம், வல்லமை இவற்றை வெளிப்படுத்துகிறார்? அவ ரது பலத்த கரம் உங்கள் மீது அடிக்கடி வைக்கப்படுகிறதா? அவரது வல்லமை உங்கள் பணிகளில் வெளிப்படுகிறதா? அவர் நம்மை நிரப்பி பயன்படுத்தும் விதத்தில் நம் வாழ்வு அளக்கப்படலாம். நமது சுய முயற்சிகளால் செய்யப்படும் பணிகளல்ல, அவர் உங்களிலும் உங்கள் மூலமாகவும் செய்யும் பணிகளே சிறப்பானவை. இந்த நோக்கத்தோடு தான் சிருஷ்டிக்கப்பட்டீர்கள். இதற் காகவே அவர் உங்களில் வாசம் பண்ணுகிறார். இந்த பூமியிலுள்ள மலிவான ஏமாற்றும் அளவுகளாலே உங்கள் வாழ்க்கையை அளக்காமல், உங்களில் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு உங்கள் வாழ்வை அளக்கலாம்.

உபவாசம் ஜெபத்தின் வலிமையைக் கூட்டுகிறது

Fasting adds weight to prayer

Gordon Cove

நாம் உபவாசித்து ஜெபிக்கும் போது நாம் உண்மையாக ஒரு உறுதி யுடன்அமர்ந்துஒரு தொழிலில் ஈடுபடுகி றோம். தேவ ஜனங்கள் அதிக உணவு நேரங்களைத் தவிர்த்து அதிக சமயத் தினை ஜெபத்தில் செலவு பண்ணினால் அதிகமான பதில்களைப் பெறலாம்.

ஆதித்திருச்சபை வரலாற்றில் உபவாசம் கிறிஸ்தவ மார்க்கத்தின் ஒரு தூணாகக் கருதப்பட்டது. சபை வல்லமை யுடையதாக இருந்த போது உபவாசம் விசுவாசத்தின் முக்கிய பகுதியா யிருந்தது. இன்று உபவாசம் இழந்து போன கலையாகவும், பழக்கத்திலும் போதனையிலும் இல்லாமலுமாகி விட்டது. உபவாசம் என்பது உணவை மட்டும் கட்டுப்படுத்துவதல்ல, அனைத்து சுகபோகங்களையும் ஒதுக்கி விடுவ தாகும். அது ஒரு நோக்கத்துடன் உணவையும் இன்பங்களையும் ஒரு புறமாக ஒதுக்கி வைப்பதைக் குறிக்கும்.

உபவாசம், நாம் ஆவிக்குரிய ஏமாற்றமான நிலைக்கு வந்தெட்டி யதைக் காண்பிக்கிறது. இப்போது நாம் தேவனையே முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற நிலைக்கு வந்து விட்டோம். தேவனைத் தேடும் போது அநேக காரியங்களுக்கு நமது முதுகைக் காட்ட வேண்டும். அதாவது உணவைக் கூட புறக்கணிக்க வேண்டும். நமது ஜெபங்கள் கேட்கப்பட தேவனையே நாம் முதன்மைப் படுத்துகிறோம் என்ப தற்காக உணவு உட்பட சில காரியங் களை நாம் விட வேண்டியதாயிருக்கிறது.

சாதாரண உபவாசம் உணவை மட்டும் விட்டுவிடுவதாயிருக்கிறது. ஆனால் ஆவிக்குரிய நிலையில் அநேக காரியங்களை ஒதுக்க வேண்டியதா யிருக்கிறது. நாம் ஒதுக்குகிறவைகள் உண்மையில் தீமையற்றவைகளாயிருக் கலாம். நாம் இயற்கையாக விரும்புகிற வைகளை அகற்றி வைப்பது எதிர் பார்க்கப்படுகிறது.

எனவே உபவாசம் என்பது ஜெபத்தின்போது தேவனை, உணவைக் காட்டிலும் முன் வைப்பதாகும். தேவனைத் தேடுகிற ஒருவர் சில வேளைகளிலாவது அனைத்து கடமைகளையும் இன்பங் களையும் விலக்குவது அவசியமல்லவா?

நமது வாழ்வின் மிகப் பெரிய குறைவு, அதிகமாக நாம் ஜெபிப்பதும் உபவாசிப்பதுமில்லை. ஜெபம் அகிலாண் டத்தையும் அசைத்துக் கொண்டிருக்கும் தேவ கரத்தை அசைக்கக் கூடியது. உபவாசம் ஜெபத்தின் வலிமையை கூட்டுகிறது. தெய்வீக ஆதாரங்களை ஒரு விசுவாசி உபவாசத்தின் மூலம் பெறலாம்.

சிந்தனைக்கு

உங்கள் பரம தகப்பனுடைய உண்மையான குணாதிசயத்தை அறிந்திருந்தால் **உங்கள் வாழ்வு** சரியாயிருக்கும்.

நமது வாழ்வின் மிகப் பெரிய குறைவு அதிகமாக நாம் **ஜெபிப்பதும் உபவாசிப்பது**மில்லை.

சபை தனக்கு அளிக்கப்பட்ட கட்டளையை நிறைவேற்ற **ஜெபத்தின்** மிகப் பெரிய முக்கியத்துவத்தை உணர வேண்டும்.

அதிகமான ஜெபமும், **மேலான** ஜெபமும் சபை தனக்கு ஆண்டவரும் எஜமானுமாகிய தேவன் கொடுத்த கடின மெல்லிய, பொறுப்பான காரியத்தை நிறைவேற்ற மிகவும் அவசியம்.

ஜெபக் குறைவுள்ள சபையில் தோல்வியே ஏற்படும். அதிகமாக ஜெபிக்கும் **சபை வெற்றி**யடைவது மிக நிச்சயம்.

ஆவியின் கனி என்பது அவரது தூய்மையின் நிறைவும், வாழ்வும் நம்மிலிருப்பதை நம்மூலமாக வெளிப்படுத்துவதாகும்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason